# நெஞ்சில் நிறைந்த எம் பெற்றோரின்

# நினைவு மலர்



**ஜோண் ப. நவரெத்தினராசா**

மேசி அன்புமணி நவரெத்தினராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

31 ஜனவரி 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெஞ்சில் நிறைந்த

## எம் பெற்றோரின்


# நினைவு மலர்

ஜோண் ப. நவரெத்தினராசா

மேசி அன்புமணி நவரெத்தினராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



ஜோண்.ப.நவரெத்தினராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# என்னுரை

## ஸ்ரான்லி ஜெயராஜ் தரும் குறிப்புகள்

இந்த நினைவு மலரை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் 2000ம் ஆண்டில் எனக்குத் தோன்றியது. அதன் பின்பு 2004 ஆம் ஆண்டு அளவில் ஆக்கங்கள் கேட்டு பலருக்குக் கடிதங்கள் எழுதினேன். அவர்களில் சிலர் ஆக்கங்கள் அனுப்பிக் கொடுத்தார்கள். ஆக்கங்கள் தந்தவர்களில் சிலர் இன்று உயிரோடு இல்லை. இதற்குரிய காலம் பிந்தியவேளையிலே தாயாரைப் பற்றிய குறிப்புகளும் சேர்த்து அவரது 100வது வயது பூர்த்தியாவதையும் குறிப்பிடலாம் என்று எண்ணினேன். இது ஒரு சிறிய புத்தக வடிவிலே வர இருக்கின்றது. பல விபரங்கள் அடங்கி இருக்கின்றன. குடும்பத்தார் மத்தியிலும் மற்றும் நண்பர்கள் மத்தியிலும் விபரங்கள் அடங்கிய நூலாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை. இந்தச் சிறிய நூலை வாசிப்பதனால் நாம் விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். அதற்கு மேலாக பெற்றாரின் சிறப்புகளை அறிந்து நம்மைத் திருத்தி வாழ்வதற்கு முயற்சிப்பது இந்தக் கைநூல் செய்கின்ற பெரிய பணியாகும் என்று நம்புகிறேன்.

எருவில் என்ற கிராமத்தைச் சேர்ந்த அவர், அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு எருவில் சென்று வாழ்ந்து, அங்கேயே மரிக்கவும் விரும்பினார். அவர் விருப்பப்படி அது நடந்தேறியது. அதன்பின்பு எனது தாயார் 13 வருடங்கள் உயிரோடிருந்து இவ்வுலகை நீத்தார். என்னுடைய தகப்பனார் உயர் அதிகாரிகள் பாடசாலைக்கு வரும் பொழுது, அவர் உபசரிக்கும் பாங்கு சிறப்பானது.

அவர் வாழ்ந்த பகுதியில் இருந்த முஸ்லீம் சகோதரர்கள், அவர்கள் குடும்பத்தில் ஒரு தலைவனாக ஏற்றுக் கொள்ளும் பண்பு இருந்தது. ஆசிரியர் சங்கத் தலைவராக பல வருடங்கள் சிறப்பாகப் பணி செய்தார். அக்கரைப்பற்று என்னும் கிராமத்தில் அவர் பணிபுரிந்த போது கோளாவில் என்னும் ஊரில் இரண்டு நாட்டு வைத்தியர்கள் இருந்தார்கள். ஒருவர் புத்தி சுவாதினம் உள்ளவர்களுக்கு வைத்தியம் செய்பவர். மற்றவர் விஷக்கடி வைத்தியர். வெளியிடங்களிலிருந்து இந்த வைத்தியர்களிடம் உதவி தேடி வருபவர்கள் எப்படியோ எனது தகப்பனாரை அறிந்து எங்கள் வீட்டிற்கு வந்து, தங்கியிருந்து பூரண குணமடைந்த பின்பு செல்வார்கள். நெருக்கடியான பல காலங்கள் எனது பெற்றாருக்கு இருந்தது. ஐந்து பிள்ளைகள் ஒரே நேரத்தில் விடுதியில் தங்கிப் படித்தார்கள். அவர்களுக்கு பாடசாலை, விடுதிப்பணம் கட்டுவது, அதே வேளை குடும்பச் செலவைச் சமாளிப்பது யாவும் சிரமமான செயல். பின்பு மூத்த மகன் அருள் ராஜாவும் விடுதிக்குச் செல்ல ஆக ஆறு பேருக்கும் தகப்பனார் விடுதிச் செலவினை கவனித்துக் கொண்டார்.

இரு முறை நோய்வாய்ப் பட்டு, வைத்தியசாலையில் தங்கியிருந்தார். அவ்வேளையில் அவர் இருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் தூர இடத்திலிருந்து வந்தவர்களுக்கு உணவு வசதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இல்லை என்பதை அவர்களிடம் பேச்சுக் கொடுத்து அறிந்து கொள்வார். பின்பு என்னிடம் பணத்தைத் தந்து உரிய மீன், கறிவகைகளை வாங்கி வீட்டிலே கொடுத்து சமைத்து யாவருக்கும் உணவு கொண்டு வரும்படி செய்வார். எருவிலிலே எங்கள் வீடு, பள்ளிக்கூட வளவு என்று அழைப்படுவதுண்டு. இக்கிராமத்தில் முதலாவது ஆசிரியராக எனது தகப்பனார் இருந்தார். அவரை ராசா மாஸ்டர் அல்லது ராசா வாத்தியார் என்று அழைப்பார்கள். சுதந்திரம் அடைவதற்கு முன்பு இக்கிராமம் பின்தங்கிய, கவனிக்கப்படாத கிராமமாக இருந்தது. சிறு பிள்ளைகளாக இவ்விடத்திற்குச் சென்று, கைக்குத்து அரிசியுடன், சேனையில் புதிதாகக் கிடைத்த மரக்கறியுடன், விரால், பனையான், குறட்டை என்ற குளத்து மீனுடன் என் பெற்றோருடன் சேர்ந்து உணவருந்திய காலம் ஒரு மறக்க முடியாத காலமாகும்.

சிறு தொழில் செய்கிற தொழிலாளர்களையும் சாதிப் பிரிவால் சிறுபான்மையினர் என்று அழைக்கப் படுகிறவர்களையும் எனது பெற்றோர் அணைத்து வாழ்ந்தார்கள். அது இவர்கள். சிறப்பு

இவருடைய சிறப்பு மற்றவர்களுக்கு உதவுதல் அவர்கள் வேதனையைக் கண்டு பரிதவித்தல், இறை வழிபாட்டிற்குப் பிள்ளைகள் தவறாது செல்வதற்கு உரிய வசதிகளைச் செய்து கொடுத்தல் என்பன.

அப்பா எவ்வேளையிலும் நகைச்சுவையாகப் பேசுவார் என்பது அனைவரதும் கருத்தாகும். ஒருமுறை மெதடிஸ்த சபையில் ஊழியராக இருந்த இளையதம்பி போதகருடைய மனைவி இறந்து விட்டார். அடக்கம் இன்னும் நடைபெறவில்லை. போதகர் கவலையுடன் இருக்கும் போது எனது தகப்பனார் வீட்டிலே முட்டைக் கோப்பியை தயார் செய்து ஆவி பறக்கத்தக்கதாக ஒரு கொத்துக் கோப்பையிலே கொண்டு வந்து, போதகர் இதை அருந்துங்கள் என்று சொன்னார். போதகர் அதற்கு மறு மொழியாக தளதளத்த கம்மிய குரலிலே "இதை எப்படித் தம்பி குடிப்பேன்" என்று கண் கலங்கினார். அதற்கு எனது தகப்பனார் ஊதி ஊதிக் குடியுங்கள் என்று நகைச்சுவையாகக் கூறினார். இதை அருகில் இருந்து கேட்ட பொன்னுச்சாமி உபதேசிகர் பல ஆண்டுகளின் பின்பு எனக்கு தெரிவித்தார்.

ஐயா (அப்பா) பிறரை வாழ்த்துவது "நீ சாகும் வரையும் உயிரோடிருப்பாய்" என்று. இவ்வாழ்த்துதல் பிழைக்காது என்பது யாவருக்கும் தெரியும். இன்னும் சிலகாலம் வாழ்ந்திருந்தால் *J. P* பட்டமும் அறிஞர் எனும் பட்டமும் கிடைத்திருக்கும்.

பாடசாலை மிஷன் வீட்டைச் சுற்றி இருக்கின்ற குடும்பத்தார், குறைந்தது 50 வீடுகளைப் பார்வையிட்டு வருவார். அதிகமாக மழைக் காலங்களில் இது நடக்கும் அங்கு சென்று "என்ன குசினியில் அடுப்பெரியவில்லை. பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடு. பாடசாலைக்கு வந்து மிகுதி 'பணிசை' எடுத்துச் செல், இந்தா 2 ரூபா அரிசி வாங்கு, வீட்டிற்கு வந்து முருங்கை இலையாவது எடுத்துச் சமை" என்று சொல்வார். இப்படிச் சுற்றி வந்து எங்களுக்கு அறிவுரை கூறுவார். அது ஏசுவது போல் இருக்கும். "இன்று எத்தனை வீடுகளில் அடுப்பு எரியவில்லை தெரியுமா? மனிதர்கள் மழையினால் பட்டினி, உங்களுக்கு நேரத்துக்கு நேரம் 5, 6 கறிகளுடன் சாப்பாடு, தினமும் கூலி வேலை செய்பவன் வீடு பட்டினி, இதை உணர வேணும். மற்றவன் பசித்திருக்க சாப்பிடுபவன் மனிதனல்ல" என்பார் இது அடிக்கடி கேட்கும் மொழிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெள்ளிக்கிழமைகளில் மதியம் ஆசிரியர் மாணவர் பொதுக் கூட்டம். அக்கூட்டத்தில் அறிவுரை, படிப்பினை உள்ள கதைகள் கூறுவார். சில பெற்றாரும் வந்து பாடசாலை அரை மதிளுக்கப்பால் நின்று கேட்பார்கள்.

ஐயா சொல்லி அன்று பாடிய ஈற்றெழுத்துக் கவிகள் இன்றும் ஞாபகத்தில் இருக்கின்றன. சொல்லுக்கேற்ற நாலடியார் பாடல் ஞாபகத்தில் வராத வேளை நான் சினிமாப் பாடலையும், கிறிஸ்தவப் பாடலையும் பாடியதுண்டு.

பொத்துவில் என்ற இடத்தில் ஐயா படிப்பிற்கும்போது ஒரு மாணவன் பாடசாலைக்கு வராததைக் கண்டு அவர் வீட்டிற்குச் சென்று வினவினார். தகப்பன் பல ஏக்கர் வயல் செய்பவர். மகனை குருவிக் காவலுக்கு அனுப்பியதாகக் கூறினார். துவிச்சக்கர வண்டியை அனுப்பி மகனைக் வரவழைத்தார் வந்தவுடன், ஓர் அறை (அடி) கொடுத்தார். குருவிக்காவல் பாடசாலை விட்டதும், அல்லது விடுமுறையில் அல்லது சனி, ஞாயிறில் செய்யலாம். படிக்கின்ற வயதில் படிக்க வேண்டும். கொப்பி, பென்சில், புத்தகம் இல்லாது பாடசாலை வராது விட்டால் நான் வாங்கித் தருவேன். இனி பாடசாலைக்கு வராது விட்டால் உங்க வாப்பாவிற்கு அடிப்பேன் என அவன் தகப்பனின் முன்னாலேயே கூறினார். இதை 1979ம் ஆண்டு இம்மாணவன் (இன்று ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்) கூறினார். மேலும் அந்த அடியுடன் கல்வியின் அவசியத்தை உணர்ந்து எனது தம்பி, தங்கைகளையும் படிப்பித்தேன் என நாக்குத் தளதளக்க கூறினார். இது இன்று நடக்குமா? அடித்ததற்கும் அடிப்பேன் என்று சொன்னதற்கும் பொலிஸ், கல்விக் காரியாலயங்களை நாடுவர். ஆனால் ஐயாவிற்கு ஆளுமை இருந்தது. முஸ்லீம், இந்து மக்களிடம் செல்வாக்கு இருந்தது. அக்கரைப்பற்றில் இருக்கும் போது அவர் நண்பர்கள் காரியப்பர் டாக்டர், O. A என்ற பட்டப்பேர் உள்ள இஸ்லாமிய நண்பர், கோஸ் மொகம்மது தேன் குழல் வியாபாரி, பியசிறி J. P, வெள்ளையன் பரிகாரி, காரனி விஷக்கடி வைத்தியர், பசளை, பயிர் பூச்சிக் கொல்லி கொம்பனி வைத்திருந்த சோமர், காடியர் மருமகன் விஜயசிங்கம், புகாரி ஆலீம், அன்பன் நடராசா மாஸ்டர் இன்னும் பலர்.

கோமாரி, பொத்துவில், நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சம்மாந்துறை ஆகிய இடங்களில் படிப்பிற்கும் போதும் எல்லா மதத்தவரும் நண்பர்கள்.

அவர் இறக்கும் போதும் கடன் ஒன்றும் அவருக்கில்லை, அம்மா இறக்கும் போதும் ஒரு கடனும் வைத்திருக்கவில்லை. இன்று வாழும் நமக்கு இது ஒரு படிப்பினை.

சிறு வயதில் என்னை நடனமாடி (வய்லா) பாட்டுப்பாடச் சொல்வார்கள். நானாக பாட்டியற்றி ஆடுவேன் அதில் ஒரு பாடலை சோதி மச்சாள் நினைவில் வைத்துக் கூறினர். - அப்பாடல் "சுலுக்கார்ர கடையில் சுலுக்கட்டி விற்குதே அரசார்ர, கடையில மண்ணாங்கட்டி விற்குதே" இந்தப் பயிற்சிதான் இன்று உதவுகிறதோ?



**ஸ்ரான்லி ஜெயராஜ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எங்கள் அன்புத் தந்தை
# ஜே. பி. நவரத்தினராசாவின்
# நூற்றாண்டு நினைவையொட்டி ஆக்கப்பட்ட
# நினைவுக் கவிதை
# 24-12-2008

### நேரிசை வெண்பா

இந்நிலத்தில் நல்மகனாய்ப் பல்லாண்டு வாழ்ந்திருந்து
அந்நிலத்தில் குடியேறும் அழைப்பதனால் - தன்னலமே
நாடாத நவரத்தின ராசாவே இன்றுன்னை
கூடியே நினைக்கின்றோம் குவிந்து.

### நேரிசை ஆசிரியப்பா

மட்டுநகர் தெற்கே மதிப்புள்ள கிராமமென
இயற்கை வளம்நிறைந்த எருவில் கிராமத்தில்
தந்தையாம் பரமக் குட்டிப் போடிக்கு
தரமுள்ள மகனாகத் தரணியில் பிறந்தார்
மெதடிஸ் தாபனம் ஆக்கிய பள்ளியாம்
மட்டுநகர் அரசடிக் கல்விக் கூடத்தில்
இட்டமாய்த தனது ஆரம்பக் கல்வியை
இனிதே கற்ற இந்துவாய் இருந்தார்
கிறீஸ்தவ கூடம் தன்அறிவைத் தந்ததினால்
கிறீஸ்துவை இரட்சகர் ஆக்கியே வாழ்ந்தார்
காலப் பொருத்தம் கனிவுடன் வந்ததும்
கன்னியாம் இல்லாள் அருளம் மாவுடன்
இல்லறம் நடாத்தி ஈராறு எச்சங்கள்
ஈன்றனர் இதற்கொரு பழமொழி பொருத்தம்
ஐந்துபெண் பெற்றால் அரசனும் ஆண்டி
ஏழுபெண் பெற்றும் ஏழிசை மன்னனாய்
நைந்துபோ காது நலமுடன் வாழ்ந்தார்
தலைமை ஆசான் பதவியைத் தாங்கி
தரமுள்ள சேவையைத் தவறாது புரிந்தார்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாய்ந்த மருதெனும் முன்னேறாக் கிராமத்தில்
கல்விச் சேவையை சிறப்புறச் செய்தார்
கல்விக்கூடம் ஆரம்பம் செய்யு முன்
கிராமத்து மக்கள் அறிவுரை கேட்க
ஆவன செய்தபின் ஆரம்பம் செய்தார்
மக்களும் ஆவலாய் அறிவுரை கேட்க
மகிழ்ந்து குழுமி மகிழ்ச்சியாய் வந்தனர்
அவ்வூர் ஏழைகள் தங்களின் குறைகளை
அனுதினம் தீர்த்து அன்பாய் இருந்தார்
கிறீஸ்தவ மதத்தில் நிறைவான நம்பிக்கை
உள்ளத்தில் இருத்தி உண்மையாய் வாழ்ந்தார்
ஆலயத் தொண்டு ஆவலாய்ச் செய்து
ஆண்டவர் செய்தியை ஆலயம் அளித்தார்
ஜே.பி. என்னும் முன்னெழுத் தவர்பெயர்
தாங்கி இருந்ததால் ஒருநபர் அவரை
சமா தானத்தின் நீதவான் என்றே
நம்பிக் கையொப்பம் எடுக்கவே வந்தார்
நானந்த அதிகாரி அல்லவே என்று
நம்பும் வகையிலே எடுத்தவர் சொன்னார்
ஐம்பத்து ஆறில் பெருவெள்ள அழிவினால்
பலவகை இழப்பை அடைந்தவர் தமக்கு
பள்ளிக் கூடத்தில் பலநாள் தஞ்சம்
அடையவே செய்த சிறந்தபண் பாளன்
எங்களை விட்டு இறைமகன் இயேசுவின்
மடிதனில் தவழும் தந்தைஎந் நாளும்
மறைந்ததாய் இல்லைஎம் மனங்களை விட்டு
அன்புடன் நினைக்க அருட்கரம் தந்த
ஆண்டவர் தமக்கு நன்றியை நவில்கிறோம்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டிப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அக்கரைப்பற்று மிஷன் இல்லத்தில் 1955ம் ஆண்டில் எடுத்த புகைப்படம்



**இடம் – வலம் கீழ் வரிசை –** வண. ந. ஸ்ரான்லி ஜெயராஜ் (ஸ்ரான்லி), டேவிட் தேவராசா (டேவிட்), ஜோசப் செபராசா (ராஜு), ஜொயிஸ் ஜெயமணி (நவமணி)

**நடுவரிசை –** ரொஸ்லின் அரியமலர் (அரியக்கா), J. P நவரெத்தினராசா (ஐயா), மேசி அன்புமணி (அருள் அக்கா), மடியில் – கிறேஸ் அன்புமணி (கிறேஸ்) அக்னஸ் நேசரெட்ணம் (நேசக்கா)

**பின்வரிசை –** விக்ரோறியா செல்வமணி (சின்னபேபி), மாக்றட் ஜீவமணி (பெரிய பேபி), சாமுவேல் அருள் ராஜா (அருள்), எஸ்தர் தேவகடாச்சமணி (வாவா) ஜோர்ஜ் யோகராசா (ஜோர்ஜ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நினைவில் நிலைத்தவை

இக்கட்டுரையினை எழுதிட முனைந்தபோது, கிறிஸ்தவ வேதாகமத்திலுள்ள ஒருபகுதியும், திருக்குறளிலுள்ள இரண்டு குறள் வெண்பாக்களும் எனது நினைவுக்கு வந்தன. அவற்றைக் கீழே தருதும்.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கின்ற
தேசத்திலே, உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும்
நீ நன்றாயிருப்பதற்கும் உன் தகப்பனையும்
உன் தாயையும் கனம் பண்ணுவாயாக"

(உபாகமம்: 5:16)

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" (குறள்: 61)

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" (குறள்: 70)

பெற்றோர் உயிருடன் இருக்கும்போது மட்டுமல்ல, அவர்கள் மறுமைக்குட் பிரவேசித்த பின்னரும், அவர்களது பெருமையினைப் பேசுவதும், அவர்கள்தம் நினைவினைப் போற்றுவதும் அறிவறிந்த மக்களின் உயிரனைய உயரிய பண்பின்பாற்படும்.

இப்பண்பின் பாற்பட்டு, அமரர். ஜே. பி. நவரெத்தினராஜா ஆசிரியர் அவர்களின் நூறாண்டு நினைவு நாளை நினைவு கூரும் வண்ணம், அவர்தம் அருமை மகன்மாருள் ஒருவரான அருள் திரு. ஜெயராஜ் அவர்களால் வெளியிடப்படும் ஏடானது, மேலே கூறப்பட்ட கூற்றுகளுக்கு விளக்கந்தருவதாக அமைந்திருக்கக் காண்கின்றோம்.

அமரர். ஜே. பி. நவரெத்தினராஜா அவர்கள், பழைமையானதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும், செழிப்பும், வனப்பும் மிக்கதுமான எருவில் என்னும் கிராமத்திலே, 1908 நவம்பர் மாதம் 24ம் திகதி பிறந்தார்.

மேற்படி கிராமமானது, மட்டக்களப்பின், மண்முனை தெற்கு எருவில் பற்றிலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது. அமரர். நவரெத்தினராஜா அவர்களின் தந்தையாரான பரமக்குட்டிப் போடியார் அவர்கள் போலிஸ் தமைமைக்காரர் ஒருவரின் மகனாவார். பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்களாக விளங்கிய அமரர்கள். எஸ். யூ. எதிர்மன்னசிங்கம், எஸ். யூ. தம்பிராஜா என்பவர்களும், புகழ் பெற்ற கவிஞரான அமரர். நா. ஏரம்பமூர்த்தி (எருவில் மூர்த்தி) அவர்களும் எருவில் கிராமத்தின் புகழ் பூத்த புதல்வர்கள் என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தேர்ச்சி பெற்ற அமரர். நவரெத்தினராஜா அவர்கள், கல்முனையைச் சேர்ந்த மேர்சி அருளம்மா அவர்களைத் தமது வாழ்க்கைத் துணையாக்கிக் கொண்டார். கொழும்பு உவெஸ்லி கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும், உடற்பயிற்சிப் போதனாசிரியருமாகப் பணியாற்றிய பெருமைக்குரிய வித்துவான் ஜோன் வேதநாயகம் அவர்களும், திருமதி. மேர்சி அருளம்மா அவர்களும் கிறிஸ்தவ சமயப்பணி ஆற்றிய திருமதி. தங்கமுத்து அவர்களின் பிள்ளைகள் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

அமரர். நவரெத்தினராஜா தம்பதியினருக்குப் பன்னிரு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களுள் எழுவர் பெண்கள், ஐவர் ஆண்கள். "ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்பது நமக்குத் தெரிந்த பழமொழியாகும். ஆனால் எழு பெண்களைப் பெற்ற அமரர். நவரெத்தினராஜா அவர்கள் ஆண்டியாகாமலே ராஜாவாகவே வாழ்ந்தமைக்கு அவருடைய பெண் குழந்தைகள் அனைவருக்கும் இறைவன் வழங்கிய அழகுடைமையோடு பின்னிப் பிணைந்திருந்த அருளுடைமையும், ஈன்று புறந்தந்த தாயாற்புகட்டப்பட்ட பண்புடைமையும், சான்றோராக்கிடத் தந்தையாராற் காட்டப்பட்ட வழிகாட்டலோடு பாடசாலைகளில் ஈட்டிக் கொண்ட அறிவுடைமையுமே காரணங்களெனத் துணிந்து கூறலாம். மகள்மார் அத்தனை பேருக்கும் நடந்தேறியவை காதற்திருமணங்களே என்பது குறிப்பிட்டுக் கூறவேண்டியதாம்.

அமரர். நவரெத்தினராஜா அவர்களுடன் எனக்கு நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. அவரைப் பலதடவைகள் கண்டிருக்கிறேன். இரண்டொரு தடவைகள் உரையாடியிருக்கிறேன். அவருடைய புன்னகை தவழும் முகமும், நகைச்சுவை இழையோடியிருந்த கலகலப்பான பேச்சும் மனதில் நிலைத்திருக்கின்றன, நிறைந்திருக்கின்றன.

அமரரின் மகன்மார் ஐவரும் ராஜாக்கள், அருள்ராஜா, யோகராஜா, ஜெயராஜ், தேவராஜா, செபராஜா ஆகியோரே அவர்கள். இவர்களுள் முதலிற் சுட்டப்பட்ட அருள்ராஜா அவர்கள் வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் எனது உடன் ஆசிரியர். அவரிடம் காணப்பட்ட நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, கற்பித்தற் திறமை, நேரம்தவறாமை என்பவை அவரது தந்தையாரான அமரர். நவரெத்தினராஜா அவர்கள் வித்திய வித்துகள்.

அமரரின் மகள்மார் எழுவரில், ஐவர் மணிமகள், தேவகடாட்சமணி, ஜீவமணி, செல்வமணி, ஜெபமணி, அன்புமணி ஆகியோரே அவர்கள். இவர்களில் இறுதியிற் சுட்டப்பட்ட அன்புமணி தற்போது கனடாவில் வாழ்ந்து வருகின்றார். இவர் பட்டிருப்பு மத்தியமகா வித்தியாலயத்தில் என்னிடம் படித்தவர்கள். அவரிடம் பின்னிப் பிணைந்துள்ள இறை பக்தி, குரு பக்தி, நிமிர்ந்த ஞானச்செருக்கு, அடக்கமுடைமை முதலிய நற்பண்புகள் அவரது தாயாரும் தந்தையாரும் வித்திய வித்துக்களே.

"ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பார்கள். ஒரு குடும்ப நிலையறிய பிள்ளைகள் இருவரின் குணநலப் பண்புகள் போதுமானவைதாமே?.

அமரர். நவரெத்தினராஜா அவர்களின் குடும்பத்தாருடன் நான் கொண்டிருந்த தொடர்பினைப் பார்க்கிலும், எனது துணைவியாரான திருமதி. நேசம்மா அவர்கள் கொண்டிருந்த தொடர்பானது மிகுந்த ஆழமானதாக இருந்துள்ளது. கல்முனையைச் சேர்ந்த சாய்ந்தமருது மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையில் அமரரவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்தில், எனது துணைவியார் அங்கு உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அக்காலத்தில் தம்மை அவர்களின் குடும்ப உறுப்பினர்களுள் ஒருவராகக் கொண்டு அன்பு செய்தமையும், விருந்தோம்பி உபசரித்தமையும் என் துணைவியார் இன்றும் நினைவில் வைத்துள்ளார். அக்குடும்பத்தாரின் விருந்தோம்பும் பண்பு தனித்துவமானது, ஈடிணையற்றது.

> "செல்விருந்து ஓம்பி வருவிருந்து பாத்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள் 86)

என்னும் வள்ளுவரின் வாக்குக்கியைய வாழ்வாங்கு வாழ்ந்து, வானத்தவர்க்கு நல்விருந்தாகச் சென்றுள்ள அமரர்களான நவரெத்தினராஜா அவர்களதும், துணைவியாரான அருளம்மா அவர்களதும் பெருவாழ்வையும், அமரரது நூறாவது பிறந்த நாளின் நிறைவையும் நினைந்து இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக. முன்னறி தெய்வங்களாகிய அன்னையும் பிதாவினதும் இனிய நினைவில் நிறைந்து திளைப்போமாக. தந்தையாரின் நூறாவது பிறந்தநாளின் நிறைவினைக் குறித்து வெளியிடப்படும் நினைவேடானது, குடும்பத்தாரின் நன்றிக்குரிய காணிக்கையாக அமைந்திட ஆண்டவனிடம் இறைஞ்சி நிற்போமாக.

**வித்துவான், தமிழ்ஒளி க.செபரத்தினம்**
**B. A, Dip in Ed, M. Litt.**



"பிள்ளைகளே கலங்காதிருங்கள்,
சமாதானத்தோடு வாழ்ந்தேன்,
சமாதானத்தோடு மரித்தேன்,
இயேசுவே நம் சமாதமானம்.

**John . P. Navaretnarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இராசா வாத்தியார்

இலங்கைமணித் திருநாட்டின் கிழக்கில் மிக்க
இயற்கைவளம் செறிந்திலங்கும் எருவில் ஊரில்
துலங்கு புகழ் நிறைசைவக் குடும்பம் ஒன்றில்
தோன்றியதோர் பெருமகனாம் பரமக்குட்டி
குலம்விளங்க ஈன்றெடுத்திவ் வுலகுக் கீந்த
குழந்தைகளில் இளையவனாய்ப் பிறந்து மண்ணில்
நலம்விளங்க வாழ்ந்திருந்த ஒருவர் ஜே. பி
நவரெத்தின ராஜாவாய் நாமம் பூண்டோன்

தந்தையவர் விவசாயம் மாந்திரீகம்
தமிழ்சித்த வைத்தியத்தில் தேர்ச்சி பெற்று
சந்ததமும் தனைநாடி வருப வர்க்குச்
சலியாமல் உதவுகின்ற தன்மையாளர்
மைந்தரிளம் நவரெத்தினராஜா கல்வி
வழங்குகின்ற மகத்தான தொழிலின்மீது
சிந்தையினைப் பதித்ததிலே பயிற்சி பெற்றுச்
சிறப்பான ஆசிரிய ராக ஆனார்

கல்வியினைக் கற்கையிலே யேசு நாதர்
காட்டியநல் விவிலியத்தைக் கருத்தில் ஏற்று
நல்லதொரு கிறிஸ்தவராய்த் தன்னை மாற்றி
நற்பண்பார் அன்புமணி அம்மையாரை
இல்லறத்தின் துணைவியெனக் கைப்பி டித்தே
இனியவராம் பன்னிருவர் தம்மை மக்கட்
செல்வமென ஈன்றெடுத்துச் சான்றோர் போற்றுஞ்
சீரோடு தரணியிலே வாழ்ந்து வந்தார்

இளவயதில் ஆசிரிய ராயும் பின்னர்
ஏற்றமிகு தலைமையா சிரிய ராயும்
பலவூரிற் பணியாற்றிக் கல்விப் பேற்றை
பலருக்கும் உவந்தளிக்கும் பண்பினோடும்.
உளமார அனைவரையும் நேசிக்கும்நல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உள்ளத்தோடும் அன்பிற்கோர் விளக்கமாயும்
வளமாக வாழ்ந்தவரை பலரும் "ராசா
வாத்தியார்" எனவழைப்பர் வாஞ்சையோடு

பிறப்பினுக்கும் இறப்பினுக்கும் இடையே வாழ்வாய்
பேசுகின்ற காலமது பெரிதோ அன்றோ
மறப்பதற்கு முடியாத வாழ்வைச் சொற்ப
மணிக்கணக்கில் வாழ்ந்தாலும் அதன்பால் உள்ள
சிறப்பதனை ஆவணமாய்ச் செய்து வைத்தல்
சேர்ந்தாரின் பொறுப்பாகும் மண்ணிற் பின்னர்
பிறப்பவர்க்கும் அதுவாழ வழியைக் காட்டும்
பெரும்பயனை விளைவிக்கும் பெருமை ஏற்கும்

இரண்டாயிரத் தெட்டாம் ஆண்டில் நூறாய்
எண்ணுகின்ற பிறந்ததினம் அமையும் எங்கள்
எருவில் நகர் நவரெத்ன ராஜா பாரில்
எல்லோர்க்கும் இனியவராய் இதமாய் வாழ்ந்து
பரமண்ட லஞ்சேர்ந்து நாற்ப தாண்டு
கடந்திடினும் அவர்வாழ்வை புதல்வர் ஸ்ரான்லி
தரமான ஆவணமாய்ப் பதித்து வைக்கத்
தலைப்பட்டார் அவர் செயலைத் தருமம் வாழ்த்தும்

**கவிஞர் எருவில் மூர்த்தி**




"போராட்ட சபையில் இருந்து வெற்றிவாழ்வின்
சபைக்குள் பிரவேசித்துள்ளேன், இயேசுவோடு
வாழ்பவர் வாழ்வு மிகுந்த ஆனந்தமானது."
**Mercy Anpumany Navaretnarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்முனையில் 1962ல் எடுத்த புகைப்படம்



**பின்வரிசை – வலம் – இடம்** வண. ந. ஸ்ரான்லி ஜெயராஜ், K.W.செல்வராசா, ஜோர்ஜ், அருள், N.சற்குணநாயகம், R.C.பெருமாள்

**நடுவரிசை –** சின்னபேபி, பெரியபேபி மடியில் – ராஜ்குமார், அரியம் – மடியில் ராஜூ, அம்மா, ஐயா, நேசம் – மடியில் தேவி, வாவா – மடியில் பிரேம்குமார்

**கீழ் வரிசை –** டேவிற், மலர், கிறேஸ், குணா, ராஜூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# MR. JOHN P. NAVARETNARAJAH

I am happy to write a few lines on Mr. Navartnarajah, a devoted headmaster, later designated as principal, according to the Educational ministry circular. He was the Principal of sainthamaruthu Methodist Mission Tamil Mixed School Situate between kalmunai kudi and Sainthamaruthu kalmunai, two predominantly Muslim villages. This School is in the Tamil division, Sainthamaruthu and has produced many fifth standard scholars. One such scholar is an Additional provincial Director, Ministry of Education, Trincomalee in the Eastern Province, Mr.T.Ponnampalam, who was born and bred in this division. Soon after passing the fifth standard scholarship he joined the senior school Sainthamaruthu, now known as zahira college, Kalmunai and the Principle, Mr.K.L.Sinna Lebbe, Found him to be a brilliant and industrious student. As such, Mr.Lebbe sent him to vantharumoolai Central College with a strong recommendation to Mr.Yogam Velupillai, a teacher there and his friend, to take him under his cares and educates him as a future educationalist.

Mr. Navaretnarajah was appointed to the School as Principal by his Methodist Mission Management with permission from the ministry of Education. This Tamil division was created with Tamils of many trades to do service to the people of kalmunai, kalmunai kudi and sainthamaruthu. The Principle was a good conversationalist and soon became popular with the muslims of these villages, liked by everyone and became a regular visitor to the muslim wedding houses, funerals, religious functions and other important functions in the villages. He also took a Keen interest in the studies of his students and many of the muslim students who attended this school are leading citizens today.

The Methodist Mission has done a lot to educate the muslim children of the area. Leese High School, kalmunai, now Wesley High school, has produced many leading citizens and members of parliament and has a special place in the hearts of the muslims of this area. I myself am also a product of this school.

Mr. Navaretnarajah had a large family of 12 children – seven girls and five boys. All children were educated at Wesley High school of which three boys and two girls were my students. The third boy in the family, Stanley Jeyaraj, became a Methodist Mission Priest and served all over Sri Lanka. He was a classmate of the late M.H.M. Ashraff P.C., M.P. Minister of Ports and harbor in Her Excellency chandrika kumaratunga's cabinet. Rev.stanley jeyaraj was appointed as a working Director in the rehabilitation Ministry under Hon. Ashraff, his former classmate. His elder brother, N.S. Arulrajah, was my batchate at palaly special Teachers College English Specialist course in 1969/10970.

Despite being the father of 12 children, Mr. Navaretnarajah always looked very young. Old in age, young in spirit, his name denotes thus: Navam means "Nine", Retnam Means "Gem" and Rajah Means "king". In short he was "king of Nine Gems." His wife was a "Gem" of a lady. Whoever visited their home became a member of the family during their short stay. She is a follower of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Eastern Culture and a mother to all. The boys were scouts and the girls were members of the st.John Ambulance Division of the School.

Mr. Navaretnarajah had a Very happy retired life, with all his Children Married and doing very well, and he passed away peacefully. The muslims of the area lost a very gently guide, a Guru, and a human who was a good example as to how a muslim and Tamil should live together. He was also a very gentle and kindhearted person who would never say "No" but somehow always find a solution to any problem brought to him.

Prior to 1956 all the Muslim Schools were manned by Tamil headmasters and they were instrumental in encouraging the muslim children to progress in education. In the Eastern province the Tamils and muslims lived together without any discriminiation or differences, participating in all the activities of each other.

Even today, with all the hostilities, a deep understanding exists between the Eastern province Tamils and Muslims. This will go on forever, thanks to Mr. Navartnarajah and his family who were a classic example of how Tamils and Muslims should live together.

May Allah Bless the souls of Mr.And Mrs.Navaretnarajah.

**K.L.Abubakkr Lebbe**
**Principal,**
**Zahira College Kalmunai & Retired Circuit Education**
**Officer Physical Education,**
**Kalmunai.**
**Tracher of late Hon.N.H.M.Ashraff,**
**P.C, M.P. & Minister.**



"உலக சமாதானத்திலும், மிகையான இயேசுவின் சமாதானத்தில் இன்புற்றிருக்கின்றேன், சந்தித்த, எல்லோருடைய அன்பையும் சம்பாதித்தேன், அதனால் இயேசுவின் கரத்தில் இளைப்பாறுகிறேன்."

**Rosalind Ariyamalar Selvarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நமது ஐயா



ஐயா 1908ம் ஆண்டு 11ம் மாதம் 22ம் திகதி பிறந்தவர் நாங்கள் எல்லோரும் அக்கரைப்பற்றில் இருக்கும் போது எனக்கு ஞாபகம் இருக்கிறது. எங்கள் வீட்டுக்கு குறவர் இருவர் வருவார்கள். அவர்கள் பாம்பாட்டியாகவும் (பாம்பு), உடும்பு கொண்டு வருபவர்களாகவும் இருப்பார்கள். அதை விலை பேசி ஐயா வாங்குவார் அவர்களே அதனை உரித்துத் தருவார்கள். ஐயா அதற்காகக் காசும் கொடுத்து, உடுப்புகளும் கொடுத்து, அவர்களுக்குச் சாப்பாடும், தேனீரும் கொடுக்கச் சொல்வார். ரங்கன் மகன் பெயர், அவரின் தகப்பன் பெயர் ராமசாமி என்று ஞாபகம். பின்பு சாய்ந்த மருதுக்கு நாம் வந்த பிறகும் தகப்பனும், மகனும் வருவார்கள். உடும்பு தேன் எல்லாம் கொண்டு வருவார்கள். அவர்களையும் குறவர்கள் என்று பாராமல் அன்பாக எல்லாம் கொடுத்து உபசரிப்பார். மரை இறைச்சி (காய்ந்தது) கொண்டு வருவார்கள்.

மேலும் நமது சொந்தக்காரர்களின் பிள்ளைகளின் கல்யாணத்துக்கு எல்லாம் ஐயாவும், அம்மாவும் யாராவது ஒரு பிள்ளையையும் கூட்டிப் போவர்கள். நமது வீட்டிற்கு வரும் சொந்தக்காரர்கள், தெரிந்தவர்கள் எல்லோரையும் சாப்பாடு கொடுத்து மிக நன்றாக உபசரிப்பார். Church க்கு மாதாந்தக் காணிக்கைகள், பத்தில் ஒன்று எல்லாம் ஒழுங்காக கொடுப்பார். சாய்ந்தமருது Schoolக்கு, Sunday School நடத்தவரும் ஆட்களுக்கு. hakkins அம்மா, பவளி அக்கா, மற்ற அக்காமார் எல்லோர்க்கும் அவர்கள் வந்ததும் தேனீர் கொடுக்குமாறு சொல்லுவார். பின் காலை உணவும் கொடுத்துத்தான் அனுப்புவார். ஐயா, அம்மாவை பெரிதாக வேலைகளைச் செய்ய விடமாட்டார். வெளியில் செய்யும் எல்லா வேலைகளையும் தானே சிறப்பாகச் செய்து முடிப்பார். எல்லா வேலைகளையும் மிக ஒழுங்காக நேர்த்தியாகச் செய்வார். எடுத்த பொருட்களை எடுத்த இடத்தில் வைக்க வேண்டும். உடுப்புகளை கண்டபடி எலர்லா இடங்களிலும் போட, வைக்க விடமாட்டார். இப்படி எல்லா விஷயங்களிலும் மிகக் கட்டுப்பாடாக இருக்க, செய்யச் சொல்வார். ஐயா கல்முனை மெதடிஸ்த தேவாலயத்தில் ஒரு Local preach ராகவும், வழிகாட்டியாகவும், தலைவராகவும் இருந்தார். பிரசங்கம் மிக அழகாகச் செய்வார். நாம் சாய்ந்தமருதில் இருக்கும் போது 1961ம் ஆண்டு என்று நினைக்கின்றேன். அருள் அண்ணனின் கல்யாணம் மட்டக்களப்பில் நடந்தது. அது சைவக் கல்யாணம். நமது கல்முனை Church members க்கு போதகர் உட்பட எல்லோர்க்கும் தெரியும். இதன் பின் ஐயாவை பிரசங்கங்கள் வைக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள். பின்பு என்ன நடந்ததோ எனக்குத் தெரியாது. சில காலங்களால் திரும்பவும் ஐயா Church இல் பிரசங்கம் செய்ததாக ஞாபகம். ஏழை மக்கட்கு உதவி செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நமது அம்மா



அம்மா 1931ம் ஆண்டு 8ம் மாதம் 10ம் திகதி பிறந்தார் அம்மாவைப்பற்றி நான் முதலாவது குறிப்பிடுவேன். அம்மா ஒரு பொறுமையின் சிகரம், அன்பு காட்டுவதில் முன் நிற்பார், அறிவில் சிறந்தவர், ஆற்றலில் கெட்டிக்காரி, வீட்டிற்கு வருபவர்களை இன்முகம் காட்டி உபசரிப்பார். உபகாரங்கள் பல செய்வார். எவ்வேளையும் மிக அமைதியாக இருப்பார். ஒன்றுக்கும் அவசரப்படமாட்டார். பொறுமையாக, நிதானமாகச் செயல்படுவார், எல்லோர்க்கும் நற்புத்தி கூறுவார், தன்னால் முடிந்த உதவிகளை பிறருக்குச் செய்வார். எல்லோரிடமும் மதிப்பும், மரியாதையும் வைப்பார். தனது பன்னிரண்டு பிள்ளைகளையும் ஒரு வேறுபாடு இல்லாமல் ஒரே மாதிரியாகத்தான் கவனிப்பார்கள். ஐயாவின் பென்சன் பணம் கிடைத்த வேளையில் யாரும் பிள்ளைகள் பணப்பிரச்சனையில் இருப்பதாகக் கேள்விப்பட்டால், கண்டால் உடன் பணம் கொடுத்து உதவி செய்வார். தனது பேரப்பிள்ளைகளையும் கண்ணின் மணிபோல் பாதுகாப்பார் (அரைவணைப்பார்) அழகாக நேர்த்தியான உடை உடுப்பார். ருசியாகச் சமையல் செய்து பரிமாறுவார். கோபம் வருவதே இல்லை. கடவுள் பக்தி உள்ளவர். ஆலயம் போவது குறைவாக இருந்தாலும், வீட்டில் இருந்து கொண்டே ஜெபம் செய்வார். எங்கள் சிறு பராயத்தில் ஆங்கிலம், தமிழ் இரண்டும் முதலில் எங்களுக்கு சொல்லித் தந்தது அம்மாதான். இளவயதில் தாதியாகவும் கடமை செய்துள்ளார். கிறிஸ்தவ இல்லத்தில் தான் வேலை செய்ததாகக் கூறியுள்ளார். மிகத் தூய்மையாகவும், துப்பரவாகவும் இருப்பதையே எப்பொழுதும் விரும்புவார்கள். மிக ருசியாக சமைப்பார். கிறிஸ்தவக் கதைகள், வேத வசனங்கள் எல்லாம் எங்களின் சிறு பராயத்திலேயே சொல்லித் தந்தவர்கள். அம்மா எங்களுக்கும் சரி பேரப்பிள்ளைகளுக்கும் சரி நல்ல நல்ல கிறிஸ்தவப் பாடல்களைச் சொல்லித் தருவார். அம்மாவிற்கு நகைக் கடை, உடுப்புக் கடை, சந்தை என்று போய் பெரிய பழக்கம் இல்லை. ஐயாவும், அண்ணன்மாரும்தான் அதைச் செய்வார்கள். ஐயாவின் மறைவுக்குப் பின்புதான் உடுப்புக் கடைக்குப் போய் வந்ததை நான் அறிவேன். மருமகள், மருமகன் எல்லோரையும் மிக அன்பாக பிள்ளை, தம்பி என்று தான் அழைப்பார். மிக மரியாதையுடனும், அன்பாகவும் நடத்துவார். இலேசில் யாரிடமும் கடன் வாங்கவும்மாட்டார், கடன் கொடுக்கவும்மாட்டார். யாருக்கும் பண உதவி தேவை என்றால் பண உதவி செய்வார். அதைத் திரும்பத் தர வேண்டாம் எனக் கூறுவார். எல்லாக் காரியங்களையும் நிதானமாகவும், பொறுமையோடும் கையாளுவார். தான் எவ்வளவு பொறுமையோடு குடும்பம் நடத்துகிறாரோ அதே போல் நீங்களும் எல்லா விஷயத்திலும் பொறுமையாகவும், சகிப்புத் தன்மையோடும் நடக்க வேண்டும் என புத்திமதிகள் கூறுவார்கள். கை வேலை, தையல், லேஸ்பின்னுதல் போன்ற எல்லா வகையான வேலைகளையும் செய்வார். எங்களுக்கும் சொல்லித் தந்தவர். ஆனால் நாங்கள் தான் அதனை பொறுப்பாகக் கற்கவில்லை. ஏன் என்றால் எனக்குப் படிப்பை முடிக்கவும், வீட்டுப் பொறுப்புகளை கவனிக்கும்படியாகிவிட்டது. ஒவ்வொரு Xmas லீவிலும் அன்ரி, அங்கிள் பிள்ளைகள் வீட்டிற்கு வருவார்கள் அவர்களுக்கும் விதவிதமாக எல்லா சமையல்களும் செய்து கொடுத்து உதவுவார். அவர்கள் திரும்பவும் Colombo வுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போகும் போது நிறைய தீன்பண்டங்கள் செய்து கொடுப்பார். மீன் வகைகள் பொரித்துக் கொடுது விடுவார். அம்மாவின் தங்கை மகள் சுகிர்தம் அக்கா ஒவ்வொரு School லீவுக்கும் எங்களோடுதான் வந்து இருப்பார். அவவையும் தனது மகள் போல் பார்ப்பார் (கவனிப்பார்), தனது பன்னிரெண்டு பிள்ளைகளின் பிள்ளைகள் (பேரப்பிள்ளைகள்) எல்லோரையும் தனது இறுதிக் காலம் வரையும் தன்னால் முடிந்தளவு வளர்த்து விட்டார். வேலைகள் செய்வதற்கு மாச்சல் (சோம்பல்) படமாட்டார்கள். அம்மா ஒரு தெய்வம் என்றுதான் நாங்கள் குறிப்பிட வேண்டும். சிறு பிள்ளைகளோடு சேர்ந்து இருக்கும் போது தானும் ஒரு சிறு பிள்ளை போல் மாறி விடுவார். கதைகள், பாட்டுகள் எல்லாம் பேரப்பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பா அம்மா. இப்படி அம்மாவைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம்.
அம்மா இன்னும் அதிக காலம் எங்களோடு இருந்திருக்கலாம்.
அம்மா.

**அ**ன்பிற்கு அடைக்கலம்
**ஆ**ற்றலில் சிறந்தவர்
**இ**ன்முகம் காட்டுவாள்
**ஈ**தலில் சிறந்தவள்
**உ**ண்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு
**ஊ**க்கத்தில் முன் நிற்பார்
**எ**ல்லார்க்கும் உதவிடுவார்
**ஏ**ற்றத் தாழ்வு பார்க்க மாட்டார்
**ஐ**யம் அவர்க்கு இரண்டாம் பட்சம்
**ஒ**றுப்பதில் கவனம் செலுத்துவார்
**ஓ**துவதில் தவறுவதில்லை
**ஔ**டதம் எப்பொழுதும் அவர் பையில்

**நவமணி**





அம்மாவுடன் 5 ஆண் மக்களும்
1969 கோட்டைமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெஞ்சின் நினைவினிலே நூற்றாண்டு

## ஜோன். P. நவரெத்தினராசா அவர்கள்

உலகில் நீவிர் மலர்ந்து ஆண்டுதான் நூறு
ஆயிற்றே ஐயா, அகாலமரணமெனும் சிறையினால்
காலன் எமைவிட்டு உமைப்பிரித்தாலும் - அன்பே
எம் நினைவலையில் நிற்கின்றீர் நீவிர் ஐயா
பன்னிருவர் எம் ஆறுதலின் வார்த்தைதன்னை
வடித்து வைத்தோம் உம் பொற்பாதடியில்

நிலவுக்கும் ஒளிகொடுக்கும் சூரியனாய் - எம்
நினைவுகளில் நிற்கின்றீர் பரந்த
பாசத்தால் உளம் நிறைந்து - உம்
அன்பினால் வலைவிரித்து நீவிர்
பன்னிருவர் எமைவிடுத்து, மறைந்து
பல்லாண்டு ஆயிற்றே ஐயா!

பிறப்பினால் வருவதில்லை பெருமை - ஆல
மரத்தின் வேர் விழுதாய், நிற்பது போல்
பன்னிருவர் எமைப்பாரில், நற்பண்பூட்டி
அறிவுக்கண் திறந்து, நந்நெறிப் படுத்தி - வளர்த்த
எம் ஒருவனே அன்பின் ஆசானே
எம் ஆதவனே எம் ஆருயிரே ஐயா!

இடர் வரும் போதெல்லாம் இரங்குவாய் - உடன்
பிறந்தார் எமக்கிரங்குவாய் உதவுவாய்
உதிரத்தில் ஒருவனாய் உம் நெஞ்சின் அன்பைத் - தருகையிலே
கார்மேகந்தான் அழைத்ததுவோ எமை விட்டு
உம்மை, ஆண்டு பல கடந்திட்டே ஐயா
ஏன் போனீர் அழுகின்றோம் ஆற்றாமல்

எண்ணித் துணியும் ஆற்றலும் வாழ்வு
ஏற்றமுற மண்ணில் வாழ்ந்த வாழ்க்கையும்
கண்போற் கருதிக் காத்திருந்த அன்பரே - எம்
குடும்பம், பண்போடு பயனுறவே பாரில்
அன்பு மனையாளும் பிள்ளைகளும் வாழ
வாழ்வு தந்த வள்ளலே எம் வருணனே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எம் நெஞ்சுதனில் நிறைந்து நின்று - நீவிர்
சொன்னநல் வார்த்தைகள் அனைத்தும் என்றும்
வீதியோரம் இருளகற்றும் மின்குமிழாய் இன்றும்
எம் உளவிளக்கில் ஒளிர்ந்து நின்று
பாதைகாட்டும் பசுந்தளிராய்ப் பரந்து, என்றும்
பறை சாற்றும் உம் அன்பை எம் ஐயா!
எமைவிட்டு நீர் மரணத்தால் பிரிந்தாலும்
நாம் வாழும் வாழ்வு நீர்தந்த வரந்தானே
காலம்தன் கரத்திலுமை ஏற்றுத்தான் போனாலும்
ஞாலம் இருக்கும் வரை நாம் மறவோம்,
ஞாபகத்தில், எம்மிதயம் இருக்கும் வரை
நீர் வாழ்வீர் என்றும் எம் அன்பினிலே ஐயா..

எம்மெண்ணத்தில் என்றும் இனித்திருக்கும் - தந்தையே
ஆண்டுகள் பல கடந்தாலும் இனிக்கும் உம் நினைவுகள்
ஏற்றிநிற்க என்றும் எண்ணத்தில் கண்ணியமாய்
போற்றி வளர்ப்போம் உம்பெயர் மாந்தர் தம்
நெஞ்சில் போற்றவைப்போம் வையத்துள்
வாழ்வாங்கு வாழும் வரை ஏத்திவைப்போம்.

**விக்ரோரியா செல்வமணி**





சோதி மச்சாள், சின்னபேபி, நவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றார் என் ஆலோசனைப் பணியாளர்

"தகப்பனையும், தாயையும் கனம் பண்ணுவாயாக" என்ற கற்பனையின் படி என் தாயும், தகப்பனும் தங்கள் பிள்ளைச் செல்வங்களாகிய 12 பேரையும் வளர்த்து வந்தார்கள். இதில் கடைக்குட்டியாகிய கிறேஸ் அன்புமணி என்னும் அடியாள் (நான்) மிகச் செல்லமாக வளர்க்கப்பட்டேன். என் அறிவு தெரிந்த நாளிலிருந்து 1969ம் ஆண்டு வரை தகப்பனாரின் அறிவுறுத்தலின் படியும், மற்றும் நல்ல பழக்கவழக்கங்களிலும், தேவ பயத்திலும் வளர்க்கப்பட்டேன். இதே போன்றுதான் எனது தாயாரிடமிருந்தும், 1983ம் ஆண்டு வரை நல் பழக்க வழக்கங்களிலும், ஜெபத்திலும், பொறுமையை எப்படிக் கடைப் பிடிப்பதென்றும் கற்றுக் கொண்டேன்.

எனது தகப்பனாரைப் பற்றிக் கூறுவதென்றால், தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். கண்டிப்பானவர்தான், கோபக்காரர்தான், ஆனால் அதற்குள்ளும் ஓர் அன்பு, பாசம் இருக்கத்தான் செய்தது. வீட்டிற்கு வருபவர்களை உபசரிப்பதில் முந்திக் கொள்வார். ஜாதி, மத, பேதம் பார்க்கமாட்டார்.

நாங்கள் ஓய்வுநாள் பாடசாலையிலே மனப்பாடம் செய்ததை, பாடத்தை அப்படியே வந்து தகப்பனாரிடம் கூறவேண்டும். கூறாவிட்டால் முழங்காலில் நிற்பாட்டி, பாடமாக்கி (மனப்பாடம் செய்ததை) கூறவேண்டும். அப்படிக் கூறினால்தான் சாப்பாடு தருவார். இப்படியெல்லாம் கண்டிக்கும் போது எங்களுக்குக் கஷ்டமாக இருக்கும். பிடிக்காது இருக்கும், ஆனால் அந்தச் சிறுவயதில் மனப்பாடம் செய்ததுதான் இன்றும் நினைவில் இருக்கிறது. உண்மையிலே இப்படியான ஒரு தகப்பனை எங்களுக்குத் தந்ததற்குக் கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன்.

எங்காவது பயணம் செல்ல வேண்டுமென்றால், முதல் நாள் இரவே எல்லாம் ஆயத்தப்படுத்தி வைத்துவிடுவார். மேசையில் குடும்பமாக இருந்து சாப்பிடும் வேளையில், கதைக்கக் கூடாது, சிரிக்கக்கூடாது, முள்ளைப் போடக் கடதாசி வைத்திருக்க வேண்டும். தேவையானால் மாத்திரம் இடையில் தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படியான நல்ல பழக்கங்களை இன்னும் நான் எனது வாழ்க்கையில் கடைப்பிடித்துக் கொண்டு வருகிறேன்.

சொந்தக்காரர் வீட்டிற்கு வந்தால், வந்ததும், வராததுமாக எப்போது திரும்பப் போகிறீர்கள் எனக் கேட்பார். இதனால் வந்தவர்கள் ஐயாவைப் பிழையாக விளங்கியதுமுண்டு. நல்ல எண்ணத்துடன் தான் கேட்கிறார் என்பது பின்புதான் விளங்கும். அதாவது எத்தனை நாள் நிற்பீர்கள், எங்கெல்லாம் கூட்டிச் செல்ல வேண்டுமென்று அறிந்தால்தான் அதற்கேற்றவாறு சாப்பாடு மற்றும் காரியங்களைப் பார்க்கலாம் என்பதுதான் காரணம்.

கல்முனை 3ம் குறிச்சி வீட்டில் இருக்கும் போது இனக்கலவரம் வந்தது. வெளியில் அவலக் குரல், பயங்கரச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தது. ஒருவரும் எங்கும் போக வேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வீட்டில் இருப்போம் என்று ஐயா கூறி விட்டார். அப்போதுதான் அதிசயம் நடந்தது. கதவில் *J. P.* நவரெத்தினராஜா என்ற பெயர்ப்பலகையைப் பார்த்து டேய் இது நம்ம *J. P.*யின் வீடுடா, வாங்க எல்லோரும் போவோம் என்ற சத்தம் கேட்டது. கர்த்தர் நல்லவர். அந்த நேரத்திலும் பெயரைப் பார்த்து அவர்களை வேறு பக்கம் திசை திருப்ப உதவி செய்தார். எனது தாய், தகப்பனின் ஜெபம் தான் எங்களைக் காப்பாற்றியது.

ஓர் இந்துக் குடும்பத்தில் பிறந்த எனது தகப்பனார் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வருவதற்குச் சரியான, முறையான காரியங்களை வேதத்தில் கற்றுக் கொண்டு, எனது தாயையும் மணந்து 12 பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்து குடும்பத்தைக் கர்த்தருக்குள்ளாக வழிநடத்திச் சென்றார். நாளடைவில் ஓர் அருளுரையாளராக மாறினார். எத்தனையோ பிரசங்கங்களைப் பிரசங்கித்திருக்கிறார். இந்த உலகத்தை விட்டு தான் கர்த்தரோடு இணைந்து கொள்வேன் என்ற நம்பிக்கையில் தகப்பனார் செய்த கடைசிப் பிரசங்கம் "மரணம்" என்ற செய்தியாகும். இதனால் இன்னும் நான் மரணத்தைக் குறித்துப் பயப்படுவதில்லை. எனது மறு வாழ்வு நிச்சயமாக இயேசுவின் கையில்தான் என்ற உறுதியைக் கற்றுக் கொள்ள எனது தகப்பனாரின் செய்தி வழிகோலியது.

அம்மாவைப் பற்றிக் கூறப்போனால் பொறுமையின் சிகரமாய், தகப்பனாருக்கேற்ற நல்லதொரு குணசாலியான மனைவியாகவும், பிள்ளைகளுக்கேற்ற பொறுப்புள்ள தாயாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

அம்மா அதிகமாக துப்பரவு பாரக்கிறவர். எவரோடும் அதிகமாகக் கதைக்கமாட்டார். உரத்த சத்தம் போடமாட்டார். சிரிப்பும் கொடுப்புக்குள் அழகாகச் சிரிப்பார்கள். யாரையும் எடுத்தெறிந்து பேசமாட்டார், குறை, குற்றம், கோள் கூறமாட்டார். கடவுளில் பயபக்தி உள்ளவர். சகிப்புத் தன்மையுள்ளவர். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் தகப்பனாரோடு சேர்ந்து, தானும் முந்திக் கொள்வார். இப்படியானதொரு தாயாரை எங்களுக்குக் கொடுத்ததற்காகக் கர்த்தருக்கு நன்றி.

பல நல்ல காரியங்களை அம்மா எனக்குச் சொல்லித் தந்தார். மிகவும் விசேஷமாக பொறுமையைப் பற்றி, அதாவது எப்படிக் குடும்பத்தில், வெளிமக்களோடு பொறுமையாய் இருப்பது, எந்த நேரங்களில் பொறுமையைக் கடைப்பிடிப்பது, இதனால் வரும் நன்மைகள் என்ன என்றெல்லாம் எனக்குச் சொல்லித் தந்தார்கள். எனது தாய் கூறியவைகளை நான் எனது வாழ்நாளில், விசேஷமாக குடும்பத்திலும், சபையிலும், சமூதாயத்திலும் கடைப்பிடித்துக் கொண்டு வருகிறேன். உண்மையிலேயே இந்தப் பொறுமையின் மூலமாக நான் அடைந்த நன்மைகள் அனேகம்.

முதல் பிள்ளை பெற்றெடுக்க நான் வைத்தியசாலை சென்ற வேளையில் எனது அம்மா இருட்டில், தடுமாறி விழுந்து அவஸ்தைக்குளானார்கள். எனது தாயார் எனக்காக - தனது கடைசி மகளுக்காக பல நன்மையான காரியங்களைச் செய்ததினால் வேதனைப் பட்டு, துக்கப்பட்ட பல கட்டங்களும் உண்டு. இதைத்தான் கூறுவார்கள்: தாயின் அன்புக்கு நிகர் ஏதும் இல்லை என்று.

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபம் 6ம் அதிகாரம் 4ம் வசனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்படியாகக் கூறுகிறது.

"பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீராக"

மேற் கூறிய வசனத்தைக் கைக்கொள்ளும் ஒவ்வொருவருடைய குடும்பத்திலும் சுபீட்சம் நிச்சயம் நிலவும்.

**கிறேஸ் அன்புமணி தேவராஜா.**



கிறேஸ், பெரியபேபி, ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எனது படைப்பாளிகள்

பரமக்குட்டிப் போடி ஜோன் நவரெத்தினராஜாவுக்கும், மேசி அருளம்மாவிற்கும் பதினோராவது பிள்ளையாகப் பிறந்தவன் நான். யாக்கோபின் பதினோராவது பிள்ளையின் (மகனின்) பெயரை (யோசேப்) எனக்கு எனது தகப்பனார் வைத்திருந்தார். ஐயா ஒரு கோபக்காரன், அதே வேளையில் நல்ல குணம் படைத்தவர். கொடையில் வள்ளலைப் போன்றவர். "பசி"என்றால் என்னவென்று தெரியாமல் எங்களை வளர்த்தவர்கள். உடைக்கு அவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுக்காது விட்டாலும் கல்வியறிவைப் பெருக்குவதில் முக்கியத்துவம் கொடுத்தவர். அன்று அவர் தந்த கல்வியறிவுதான் இன்று எங்களுடன் நிலைத்து நிற்கின்றது. அந்தளவில் அவரைப் பாராட்ட வேண்டும். 1965 இல் அல்லது 1966 இல் அங்கவீனமான ஒருவருக்கு முச்சக்கர வண்டியொன்றை அன்பளிப்பாகக் கொடுத்தது எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது. ஏழைகளுக்கு இரங்குபவர், அத்துடன் மற்றவர்களின் கஷ்டத்தை உணர்பவர். அன்று அவர் சொன்ன புத்திமதிகளும், கண்டிப்பும், வளர்த்த முறையும்தான் இன்று ஒரு மனிதனாக வாழ உதவி புரிகிறது.


பன்னிரண்டு பிள்ளைகளுக்கும் கல்வியறிவைப் புகட்டியது ஒரு பெருமைக்குரிய விடயம். ஐந்து ஆண் பிள்ளைகளுக்குள் எனக்கு மட்டும் "ராஜு" என்ற செல்லப் பெயரை வைத்திருந்தார். அம்மா ஒரு பொறுமைசாலி. எங்களை ஒரு குறையுமல்லாது அன்பாக வளர்த்தவர். உண்மையான ஒரு தாய்க்கு உதாரணம் படைத்தவர். "தாய்" என்ற சொல்லுக்கு அர்த்தம் படைத்தவர். "தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமுமில்லை" என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்கள் எனது பெற்றோர். "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்னும் பழமொழியை அடிக்கடி கூறி அந்தப் பழமொழியை அவர் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். ஐயாவின் கடைசிக்கால கட்டத்தில் அவரருகில் இருந்தவன் நான். அவ்வேளையில் எனக்கு வயது 17. இன்றும் என்றும் அவர்களது நினைவில் வாழ்ந்து கொண்டிருப்பேன்.

**ஜோசப் ஜெபராஜா(ராஜு)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வண.ஸ்ரான்லி ஜெயராஜ் - ஜோசப் ஜெபராஜா) ராஜஃ
அம்மா - நியோமி, மடியில் சலோமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எனது அன்பான ஐயா அம்மா

எமது குடும்பம் பெரியது பன்னிரண்டு பிள்ளைகளில், நான் பத்தாவது. ஏழு சகோதரிகளும், நான்கு சகோதரர்களும். அறுபத்தியாறு வயதில் அன்பான ஐயா இறைவனடி சேர்ந்தார். அவ்வேளையில் வைத்தியசாலையில் அன்பான , சாந்தமான அம்மா, ஸ்ரான்லி ஜெயராஜ் அண்ணன், சோதிமுத்து மச்சாள் ஆகியோருடன் நானும் இருந்தேன். ஐயாவின் ஆவி பிரியும் போது ஸ்ரான்லி அண்ணன் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து ஜெபித்தார். ஐயா மதிய உணவு சாப்பிட்ட பின்னர் ஒரு குட்டித் தூக்கம் செய்வார். அவ்வேளையில் நான் அவரின் இரண்டு கால்களையும் ஊன்றி விடுவேன். ஆனால் என் தம்பி செபராஜா ஊன்றி விடாமல் நண்பர்களுடன் விளையாடச் சென்றுவிடுவான். எனவே ஐயா எனக்குச் சொல்வார் "நீ சென்று வீதித் தொடக்கத்தில் இருக்கும் கொல்லன் கம்மாலையில் நில் உன்னைப் படத்திற்குப் கூட்டிச் செல்கிறேன்." ஐயா மிகவும் அன்பானவர், ஆனால் கோபக்காரரும் கூட. 1967ம் ஆண்டு ஸ்ரான்லி அண்ணன் கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்தார். 1968ம் ஆண்டு அவர் போதகராக வருவதற்குப் படிக்கச் செல்ல என்னை ஐயாவின் விருப்பத்தோடு அவரின் வேலையை எடுத்துக் கொடுத்தார். ஸ்ரான்லி அண்ணனின் 40 வருட Ruby Wedding இல் பேசும்போது இதைச் சொல்ல மறந்து விட்டேன்.

எங்கள் குடும்பத்தில் எல்லோருமே விளையாட்டில் (Sports) கெட்டிக்காரர்கள். நான் 400 யார் ஓட்டப்பந்தயத்தில் சிறிய தூரத்தில் இரண்டாவது இடத்திற்கு வந்தேன். இதைக் கேள்விப்பட்ட ஐயாவுக்கு கோபம் வந்தது. காரணம் நான் எல்லா விளையாட்டிலும் முதலாவது இடத்திற்கே வருவேன். கல்முனை வைத்தியசாலையில் Dr. பிச்சாண்டி (Dental sergeant) கடமையாற்றினார். எங்கள் குடும்ப நண்பர். Final sports meet அன்று Dr. பிச்சாண்டி இருவரும் Pavillion இல் பக்கத்தில் இருக்கின்றனர். எனது 400 யார் ஓட்டம் தொடங்கப் போகின்றது. திரு. பாக்கியநாயகம் Starting pistol ஐ சுடுகின்றார். எங்கள் மைதானத்தில் 400 யார் ஓடி முடிக்க இரண்டு தடவை ஓட வேண்டும். முதலாவது தடவை ஓடி நான் இரண்டாவதாக ஓடிக்கொண்டிருக்கின்றேன், இரண்டாவது முறை ஓடும் போது என் காதில் நன்றாகக் கேட்கிறது எனது ஐயாவின் உரத்த சத்தம் "மகனே நாட்டு முட்டை குடிக்கக் கொடுத்தேன், சாப்பிடக் கொடுத்தேன் ஓடுறா மகனே" அந்தச் சத்தம் கேட்டதுதான் தாமதம், நான் விரைவாக ஓடி முதல் இடத்தை எடுத்தேன். இந்தச் சம்பவத்தை நான் கனடா சென்ற வேளையில் Dr. பிச்சாண்டி சொல்லிச் சிரித்தார்.

ஐயா தலைமை ஆசிரியராக இருந்தாலும், எங்களுக்கு உடுப்பு, சாப்பாட்டு விஷயத்திலோ ஒரு குறையும் வைக்கவில்லை. எங்கள் வீட்டிற்கு வந்து மல சல கழிவறையை சுத்தம் செய்யும் பூச்சி என்ற பெயரைக் கொண்ட தோட்டியை ஐயா என்றே கூப்பிடுவார். நாங்கள் சொல்லுவோம் ஏன் பூச்சியை இப்படிக் கூப்பிடுகின்றீர்கள்? அதற்கு ஐயாவின் பதில் அவனும் மனிதன்தான். இப்படியாக எல்லோருக்கும் அன்பையும், மரியாதையையும் கொடுக்கும் நல்ல மனத்தை அவரிடத்தில் கண்டேன். அதே போன்று நானும் என் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றேன். அம்மா இளம் வயதில் விவாகம் முடித்தவர். சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வயதில் தகப்பனை இழந்தவர். நற்குணங்களின் பொக்கிஷம். மற்றப் பெண்கள் அம்மாவின் அழகைப் புகழ்ந்து கூறும்போது எனக்குப் பெருமையாக இருக்கும். 12 குழந்தைகள் பெற்றும் இளமை மாறாததை யாவரும் இருக்கின்ற புகைப்படத்தில் காணலாம். இறக்கும் வரையும் ஒப்பனை எதுவும் தனக்குச் செய்யாதவர். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர்" அதை அம்மாவில் கண்டு கொண்டு இச்சொற்றொடரை முதல்முறை சொன்னவரை வாழ்த்துகிறேன். இன்னுமொரு பிறப்பிருந்தால் ஐயா அம்மாவே என் பெற்றோராக வேண்டும். எனது இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் இப்படியான நல்ல குணங்களோடு வாழவேண்டும் எனச் சொல்லிக் கொடுப்பேன்.

இப்படியாக எனது அன்பான ஐயா அம்மாவைப் பற்றி எழுதிக் கொண்டே இருக்கலாம்.

ஐயாவும், சாந்தமான மேசி அருளம்மா அம்மா இருவரும் எங்களை நேசித்து வழிநடத்தும் இயேசு அப்பாவின் அரவணைப்பில் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில் இந்தச் சிறிய சமர்ப்பணத்தை " எனது ஐயா, அம்மா என்னும் தலைப்பில் அளிக்கின்றேன்.

**நவரத்தினராசா டேவிற் தேவராஜா**





அம்மா - அப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# APPRECIATION

It gives me great pleasure to write a few lines of appreciation in memory of Mr. Navaretnarajah who passed away a few decades ago.

I knew him as a Christian nurtured by the Methodist missionaries who spent many years' in Sri Lanka sowing the seeds of Christianity in the hearts of the people.

During Mr.Navaretnarajah's time all the schools in the Eastern Province were managed by the Methodist Mission. Mr. Navaretnarajah was the Principal of the Methodist Mission School in Sainthamaruthu in the Kalmunai District and, as Principal; He was a man of integrity and discipline.

As the school was in a muslim area the majority of the Students were Muslims. This gave Mr.Navaretnarajah an opportunity to bring about peace and harmony between the two communities, the Tamils and the Muslims, although the disparity was not so prevalent as it is at the Present time. He was instrumental in moulding students of character in that area.

He was a pillar of the Methodist church Kalmunai and he had served as an outstanding leader in the Church participating in all the church activities. He was also a local Preacher.

One thing I vividly remember was his wonderful sense of humour. One could never be unhappy in his company.

He had many children, who are doing well in different walks of life, and I had the pleasure of teaching a few of them.

He and his wife were very hospitable. His wife was a very pleasant and loving lady and together they were able to cope with life's problems as they both had such a positive attitude towards all situations that confronted them.

Mr.and Mrs. Navaretnarajah were well known and respected in the Kalmunai district.
Ranji Balasingham

**Mrs. Ranji Balasingham**

Mrs. Balasingham was born in kaluwanchiludi and J.P. Navaretnarajah was one mile away in Eruvil. She knew all 12 children of Mr. Navaretnarajah personally. Mrs. Balasingham was given the high position of being the vice president of the Methodist church in Sri lanka. As a founder Member, she continues to serve the school for the Hearing impaired in Trincomalee.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எனது பேராசான்

1938ம் வருடம் நான் 8 வயது மாணவனாக கல்முனை 3 மெதடிஸ்த மிஷன் பாடசாலையில், எனது வகுப்பு ஆசானாக அவரை முதன் முதலில் கண்டேன்.

இரண்டு வருடம் எனக்குப் படிப்பித்தார்.

கணிதமும், எழுத்தும் மட்டுமல்ல நல்ல பழக்கம், உண்மை, நேர்மை, பொறுமை என்பன அவர் கற்றுத் தராமலே நான் அவரிடம் கற்றேன்.

காலம் மாறுகிறது. 1962ம் ஆண்டு பயிற்றப்பட்ட ஆசிரியனாக வெள்ளவத்தையில் இருந்து சாய்ந்தமருது மெ. மி. த. க பாடசாலைக்கு உதவி ஆசிரியனாக நியமனம் பெற்றேன். அப்பாடசாலையில் எனக்கு 3ம் தரம் படிப்பித்த J. P. N அவர்கள் அதிபராக இருந்தார். ஐயாவுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி; தன்னிடம் படித்த மாணவன் தனக்குக் கீழ் ஆசிரியராக வந்தது.

ஐயாவின் பேச்சில் நகைச்சுவை இருக்கும் எவரையும் கடிந்து பேசமாட்டார்.
100வது பிறந்த தினத்தில் அன்னாருக்கு 100 பேர். மக்கள், மருமக்கள், பேரன், பேத்தி, பூட்டி என்று அவரது இரத்த உறவுகள் இருக்கும். ஆண்டவரின் ஆசீர்வாதம்.

நல்ல பருத்த விழுது விட்ட ஆலமரம் போல் அவரது குடும்பம் உலகில் பல பாகங்களிலும் பரந்து இருக்கின்றது.

கடவுள் ஐயாவை ஆசிர்வதித்தார்.

அந்த நேரம் (1962) 12 பிள்ளைகள். அவர்களின் படிப்பு, உடுப்பு, வைத்தியசெலவு என்று கடவுள் ஆச்சரியமாக அவரது குடும்பத்தை ஆசீர்வதித்தார். தனது பிள்ளைகளின் கல்வியில் முக்கிய கவனம் செலுத்தினார். பாடசாலையுடன் அவரது வீடும் இருந்தபடியால் அவர்களது சாப்பாட்டு முறையும் எனக்குத் தெரியும். நான் அவரது வீட்டுக்குச் செல்லப்பிள்ளை, மீன் குழம்பு, மீன் பொரியல், மீன் சொதி (முருங்கை இலை கீரை) ஐயாவுக்கு விருப்பம். எந்த நாளும் சாப்பாடு இப்படிக் குறையாமல் இருக்கும்.

இப்போது இலவசச்சீருடை, இலவசப் புத்தகம் என இருக்கிறது. அக்காலத்தில் உடுப்பு, புத்தகம் எல்லாம் காசு கொடுத்து வாங்க வேண்டும். அப்படி இருந்தும் பிள்ளைகளின் கல்வியில் ஐயா கவனம் செலுத்தினார். (அப்போது 150 ரூபா அதிபர் சம்பளம்) எனக்கு 68 ரூபா சம்பளம். சிக்கனமாகவும் சிறப்பாகவும் ஐயா வாழ்ந்து காட்டினார்.

ஐயா அவர்களிடம் இருந்த கடவுள் நம்பிக்கை, பேச்சில் செயலில் நாணயம், நம்பிக்கை நேர்மை இவற்றை நான் கண்டேன். மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருந்த உன்னத புருசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


ஒவ்வொரு பிள்ளைக்கும் குறிப்பாக பெண் பிள்ளைகள் எல்லாருக்கும் தோடு, மாலை தங்கத்தால் வாங்கிக் கொடுத்திருந்தார். (அப்போது பவுண் 22ரூபா 50சதம்) குடும்பம் பெரியது என்றாலும் மனைவி, பிள்ளைகளை எனது பேராசான் குறைவுபட விட்டது இல்லை.

சீருடனும், சிறப்புடனும் மற்றோர் போற்ற வாழ்ந்தார். எனக்கு 82 வயது. நான் வாழ்ந்த காலத்தில் எத்தனை பேர் வாழ்க்கை முறையைக் கண்டிருப்பேன். அவர்கள் அனைவரிலும் மதிப்புக்குரியவர் ஐயா திரு. J. P. நவரெத்தினராசா அவர்கள். அவருக்கு 100வது பிறந்த தின மலர் வெளியிடும் அருட்பணி டாக்டர். ஸ்ரான்லி ஜெயராஜ் அவர்களது முயற்சி வெற்றி பெற வாழ்த்துக்கள்.

இன்றும் ஐயாவின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கடவுள் ஆசீர்வாதத்தில் வாழ்கின்றார்கள். காரணம் எனது பேராசான் J. P. N தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்.

**யூ.செல்லத்தம்பி**





இ.வ :
நேசக்கா, ஞானமணி அன்ரி, ஜோன் அங்கிள், அம்மம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# J.P.NAVARETNARAJAH
# A PRINCIPAL, AN EDUCATIONIST AND A SOCIAL WORKER

I am very happy to pen down a few lines on Mr.Navaretnarajah a very close friend and an ardent supporter of mine. He is a constituent of mine. He is well respected by not only kalmunai people but by the whole of eastern Province. He is a pioneer in Methodist mission in the kalmunai area. He is a very good church goer in short a church bird. Dr.Murugesanpillai, Mr.Yogam Velupillai, Mr.Wesley kandiah and Mr.Navaretharajah are my personal and political supporters and advisors. During the General Election they are in the Tamil Villages campaigning for me. They have very good relation the sainthamaruthu Methodist mission Mixed school is only a few yards away from my home. He always comes with the problems of the Tamils. He is such a conversationist everyone listens to him.

The foreign missionaries who visit kalmunai do not fail to meet him for he is a very prominent member of the Methodist mission in kalmunai. The chairman of the Methodist mission eastern province mr.Broker selvanayagam is very good with him. He does not fail to meet Mr.Navaretharajah whenevrer he comes to kalmunai. mr.Navaretnarajah is a very active member of the kalmunai Methodist mission.

He is a very good educatioist too, being the principal of the sainthamaruthu Methodist mission mixed school. He has guided a number of muslim boys girls who studied under him. Many are holding very responsible and respective posts in the Government services. Teachers and clerical officers are many. This school is situated in the midst of two big muslim villages sainthamaruthu and kalmunaikudy. He does not miss a single wedding house or funeral house in these two villages. All are his best friends, men and woman He mixes with them very freely and carries a good name even still long after his death.

This school has been converted into a leading muslim Girls school now Mahmud ladies college, kalmunai. Named sfter the great Educationist and Minister of Education in the Cabinet of Hon. Mrs. Srimavo Bandaranaike Government. Dr.Badiudin Mahmud. Mr.Navartnarajah's children are no strangers. The boys and girls studied at Wesley High School Kalmunai. They too mix well with the Muslim boys and girls. Rev.Stanley Jeyaraj is the classmate of Hon. M.H.M.Ashraff, M.P.A Cabinet Minister Ports Authority in the government of Her Excellency chandrika Bandaranaike President of Sri Lanka. Rev. Stanley is a Classmate of Mr.M.I.Musthaffa, Lecturer Physical Education Addalaichenai College of Education.

He lived a very fruitful life and did whatever possible for the welfare and upliftment of the people of the area irrespective of cast, creed and religion. I remember him with gratitude. LET His Soul Rest in Peace.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

